யா/விக்னேஸ்வர ஆரம்ப பாடசாலை

கரவெட்டி.

# மாணவர் மதிப்பளிப்பு

# 2017

11.11.2017

# அதிபர் அறிக்கை

# தூர நோக்கு

மாறிவரும் உலக மாற்றங்களை எதிர் கொள்ள
வல்ல மனித சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்

# நோக்கக் கூற்று

எம்மை நாடி வரும் சிறார்களின் அறிவு, திறன், மனப்பாங்கு
விருத்தியூடாகவும் சவால்களை எதிர் கொள்ளும் ஆளுமையைக்
கட்டியெழுப்புவதனூடாகவும் மாறி வரும் உலகின் எந் நிலையையும் எதிர்
கொள்ள வல்ல மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புதல்

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர் வரவேற்பு
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக் கம்
- Welcome Speech by Miss.P.Prammiya
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை ஆசிரியர். திருமதி.வா.நித்தியானந்தன்
- ஆசியுரை
- தலைவர் உரை, அதிபர் அறிக்கை
- புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு
- தரம் 2 கோலாட்டம்
- தரம் 1 காவடி
- English Song
- தரம் 1 வேப்பிலை நடனம்
- தரம் 5 கண்ணன் நடனம்
- தரம் 4 மயில் நடனம்
- தரம் 3 கிராமிய நடனம்
- English Song
- பேச்சு தரம் 4 செல்வி மு.சங்கவி
- பிரதம விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் கௌரவிப்பு
- சிறுவர் நாடகம்
- மாணவர்கள் கௌரவிப்பு
- நன்றியுரை
- பாடசாலைக் கீதம்

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் பாதம் பணிந்து, இன்றைய மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்து விழாவினைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. இரத்தினம் தமிழ்மாறன் அவர்களே, அவர்தம் பாரியார் திருமதி நந்தினி தமிழ்மாறன் அவர்களே, மற்றும் எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே, ஆசிரியர்களே, பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எனதருமை மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் என் இந்நேர வணக்கத்தினைச் செலுத்தி, அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக மேடையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மதிப்பிற்குரிய திரு இரத்தினம் தமிழ்மாறன் அவர்களை அறிமுகம் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறந்த மாணவனாக, விளையாட்டு வீரனாக, சிறந்த கலைஞனாக, நல்லாசிரியராக, பல்கலை கண்ட கல்வியாளனாக இளம் வயதிலேயே, பல்வேறு சாதனைகளைப் படைத்து இன்று வட மாகாணத்தின் கணித முனையாகத் திகழும் வடமராட்சிக் கல்வி வலயத்தின் மூல வேரான திட்டமிடல் பிரிவினை திறம்பட கட்டியெழுப்பி நிர்வகித்துக் கொண்டிருக்கும் எமது பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரிய செயற்திறன் மிகு நிர்வாகியை பிரதம விருந்தினராக அழைப்பதில் பாடசாலை சமூகம் பெருமிதமடைகிறது. அவரின் வெற்றிகளுக்கு பின் புலமாக விளங்கும் அவர்தம் பாரியார் திருமதி நந்தினி தமிழ்மாறன் அவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு எமது சிறார்களுக்கு பரிசில்களை வழங்கி மகிழ்விக்க உள்ளதையும் பாடசாலை சமூகம் நன்றியுடன் பாராட்டுகிறது.

இசுறு கல்வித்திட்டத்தின் கீழ் 2010ம் ஆண்டு யா/விக்னேஸ்வரக் கல்லூரியிலிருந்து வேறாக்கப்பட்டு, புதியதோர் பாடசாலையாக 01.01.2010 முதல் உருவாக்கப்பட்ட எமது விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலையானது பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றபோதிலும், மாணவர் கற்றல் கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் தனது அடைவுகளை எட்டி வருகின்றது. பழைய மாணவர் சங்கத்தினரின் நிதி உதவியுடன் பாடசாலைக்கான சுற்றுமதில், வாயிற்கதவு என்பன 2013ல் அமைக்கப்பட்டன. யுனிசெவ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 2011ல் பாடசாலைக்கான மலசலகூடங்கள், கிணறு, தண்ணீர்த் தாங்கி, தற்காலிக வகுப்பறைக் கட்டடம் என்பன அமைக்கப்பட்டன. சேவா லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் புதிய வகுப்பறைக் கட்டடம் 2014ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அயலிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் 2016ல் பாடசாலை வகுப்பறைக் கட்டடங்கள சமையலறை என்பனவற்றுக்கு வர்ணம் தீட்டப்பட்டு, வகுப்பறை பக்க முகப்பு கூரை அமைக்கப்பட்டு, சமையலறை புனர்நிர்மாணம் செய்யப்பட்டதுடன், ஆசிரியர்களுக்கான புதிய கழிப்பறைத் தொகுதியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

வறுமையான குடும்பப் பின்னணிகொண்ட மாணவர்கள் பெருமளவில் கல்வி பயிலும் எமது பாடசாலையில், மாணவர்களுக்கான பல்வேறு நலன்புரித் திட்டங்கள் பாடசாலைச் சமூகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு தாய்ப் பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாஸ்கரன் இந்திராணி நிதியம், அதிபர் ஆசிரியர்களின் நிதி உதவி என்பன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்வரும் காலங்களில் இதற்கென நலன் விரும்பிகளின் உதவிகளும் பாடசாலைச் சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகின்றன.

வருடந்தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தாய்ப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ரூபா 1500 வீதம் வங்கியில் வைப்புச்செய்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருவதுடன் தரம் 6 தொடக்கம் எமது தாய்ப்பாடசாலையில் கல்வி கற்கும் எமது பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகைகளையும் வழங்கி வருகின்றது.

வருடாந்தம் பாடசாலையில் இல்ல மெய்வன்மைப் போட்டி, ஆங்கிலதினப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி, பொங்கல் விழா, புத்தாண்டு பல் கலாசார விழா, சிறுவர் தினம், நவராத்திரி விழா, மாணவர் மதிப்பளிப்பு விழா என்பன சகல மாணவர்களினதும் பங்களிப்புடனும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன. வாசிப்பு திறனை விருத்தி செய்யும் நோக்குடன் வாசிப்புப் போட்டிகளும் நடாத்தப்படுகின்றன. தினமும் காலை ஆராதனையின் பின் மாணவரின் வாசிப்பு, தேடல் என்பவற்றுக்கான வாய்ப்புக்கள் ஆசிரியர்களினால் வழங்கப்படுகின்றன.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் எமது பாடசாலை, கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள வளர்ந்து வரும் பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று வருகின்றது. எமது ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் இப் பரீட்சையில் வருடாந்தம் 100 புள்ளிகளுக்கு மேல் பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. கடந்த 2013, 2014, 2015 ஆண்டுகளில் முறையே 09, 11, 12 ஆக இருந்த இந்த எண்ணிக்கை 2016 இல் 17 ஆக அதிகரித்துள்ளது. அடிப்படைத் தேர்ச்சிகளை அனைத்து மாணவர்களும் அடைந்துகொள்ள வேண்டும் என்ற இலக்குடன் பாடசாலை தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. 2017 இல் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களாகிய செல்வி. பி. பிரம்மியா 165, செல்வன். அ. அருண்ராஜ் 158, செல்வி ச ஆர்த்திகா 157 ஆகியோரைப் பாராட்டுவதுடன், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களான செல்வி. ச. சதுர்ஜா 148, செல்வி. ச. சபானா 133, செல்வன். பா. வானுஜன் 125, செல்வன். ம. வானுஜன் 122 ஆகிய மாணவர்களையும் பாராட்டுகிறேன். இப்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதில் எமது பாடசாலை சமூகம் பெருமகிழ்வு கொள்கின்றது. 70 புள்ளிகளுக்கு மேல் 13 மாணவர்கள் பெற்றுள்ளனர். 08 மாணவர்கள் பெற்றோரின் அக்கறையின்மை மற்றும் அலட்சியம் காரணமாகவும் ஒழுங்கீனமான வரவு மற்றும் கல்வியில் அக்கறையின்மை காரணமாகவும் 70 புள்ளிகளுக்கு கீழ் பெற்றுள்ளனர். இது 38% ஆகும். இந்த 08 மாணவர்களையும் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாம் இனங்கண்டு அவர்களுக்கென பல்வேறு வேலைத்திட்டங்களை வகுத்து எமது பாடசாலையின் ஒட்டு மொத்த ஆசிரியர்களையும் பயன்படுத்தி அவர்களை சித்தி அடைய வைக்க மிகவும் கடுமையாக முயன்ற போதும் இந்த முயற்சியில் நாம் தோல்வியினைத் தழுவியுள்ளோம் என்பதை இந்த மகிழ்வான

வேளையிலும் அதிபர் என்ற வகையில் வேதனையுடன் பதிவு செய்கின்றேன். எதிர் வரும் காலங்களில் பெற்றோரின் முழு ஒத்துழைப்பும் மாணவரின் தீவிர பங்களிப்பும் இந்த நிலையை மாற்றியமைக்கும் என்பதிலும் நாம் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம். எமது பாடசாலையிலிருந்து புலமைப் பரிசிற் பரீட்சைக்குத் தோற்றிய முழு மாணவர் தொகையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 62 % மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதற்காக தரம் 5 வகுப்பாசிரியர் திருமதி. வாசுகி நித்தியானந்தன் அவர்களை பாராட்டுவதுடன் மற்றும் இதற்கு உறுதுணை புரிந்த அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பாடசாலைச் சமூகம் பெருமை கொள்கின்றது. எதிர்வரும் காலங்களில் பெறுபேற்று வீதங்களை மேலும் மேம்படுத்துவதற்கு பாடசாலை இவ்வேளையில் உறுதியெடுத்துக் கொள்கின்றது. பின்னடைவான மாணவர்களை இலக்காகக் கொண்டு பாடசாலை முன்னெடுத்த செயற்திட்டங்களை வெற்றிகரமாக அமுலாக்க உதவிய திருமதி சு. கண்ணன், திருமதி சு. கிரிதரன் ஆகிய ஆசிரியர்களையும் இவ் வேளையில் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறேன். தமது வகுப்பு வேலைகளுக்கு மேலதிகமாக இம்மாணவர்களின் , கல்வியடைவுகள் மேம்பட தம்மாலான முயற்சிகளை மேற்கொண்ட பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை திருமதி அ. அன்ரன் இராசநாயகம், திருமதி மா. யோகேந்திரன், திருமதி கோ. ஸ்ரீஸ்கந்தன் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பாடசாலையில் ஆங்கில பாட நிரந்தர ஆசிரியர் இல்லாத போதிலும் ELKTC செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது, பாடசாலை வங்கிச் சேவை, மாணவர் நலனோம்பு திட்டங்கள், ஆசிரியர் நலனோம்பு என்பன போன்ற பாடசாலையின் பல்வேறு வேலைத்திட்டங்களும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. முறைசார் ஆங்கிலம் அதிபரால் தற்போது கற்பிக்கப்பட்டு வருகிறது. எதிர் காலத்தில் ஒரு பகுதி நேர ஆங்கில ஆசிரியரை எமது பாடசாலைக்கு நியமனஞ் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதம விருந்தினரை இவ் வேளையில் வினயமுடன் வேண்டுகிறோம்.பாடசாலை மதிய உணவுத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த தினமும் உதவுகின்ற திருமதி. சி. ஜெயகவிதா அவர்களையும் பாடசாலை சமூகம் இவ்வேளையில் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றது. தமது குடும்ப நிகழ்வுகளின் நினைவாக பாடசாலை மாணவர்களுக்கு சுவையான உணவுகளை குறித்த தினங்களில் வழங்கிவரும் பாடசாலை ஆசிரியர்களை இவ்வேளையில் பாராட்டுவதில் அதிபர் என்ற வகையில் பெருமகிழ்வடைகிறேன். மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாட்டு விருத்திக்காக காலநேரம் பாராது

சேவையாற்றிவரும் எனது ஆசிரியர் குழாத்திற்கு எனாது நல்லாசிகளை தெரிவிப்பதில் மனநிறைவடைகிறேன்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாட்டை வெளிப்படுத்தும் எமது மாணவர்கள் கடந்த 2016 ஆம் ஆண்டில் தமிழ்மொழித்தின வாசிப்புப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமை இப்பாடசாலையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். இவ்வாண்டும் வலய மட்ட சித்திரப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட செல்வன். நி. நிதுசன் செல்வி. கு. சுஜீத்திரா ஆகியோரையும் கோட்ட மட்ட தமிழ் மொழித்தினப் பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற செல்வி மு.சஸ்லவி ஆகியோரையும் அதற்கு வழிகாட்டி உறுதுணை புரிந்த ஆசிரியர்களையும் பாராட்டுவதில் பெருமை அடைகின்றேன்.

நவராத்திரி விழாப் போட்டிகளில் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்திய அனைத்து மாணவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ELRTC செயற்றிட்டத்தில் சிறப்பு நிலை பெற்ற செல்வி வி. அட்சிகா அவர்களையும் பாராட்டுவதில் பெருமையடைகின்றேன்.

இம்முறை பரிசில் பெறாத ஏனைய மாணவர்கள் எதிர்காலத்தில் திறம்பட செயலாற்றி பரிசில்கள் பெற பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, எமது அழைப்பை ஏற்று இவ்விழாவில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பிரதம விருந்தினருக்கும் அவர்தம் பாரியாருக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறி மாணவச் செல்வங்களையும் வாழ்த்தி இவ்விழா அறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

## மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 12 | 7 | 19 |
| 2 | 7 | 9 | 16 |
| 3 | 8 | 5 | 13 |
| 4 | 9 | 11 | 20 |
| 5 | 18 | 4 | 22 |
| | 54 | 36 | 90 |

# ஆசிரிய ஆளணி விபரம்

| | | |
|---|---|---|
| திரு. ம. மகாகேதீஸ்வரன் | அதிபர் | SLPS III |
| திருமதி. அ. அன்ரன் இராசநாயகம் | ஆசிரியர் | SLTS I |
| திருமதி. மா. யோகேந்திரன் | ஆசிரியர் | SLTS I |
| திருமதி. வா. நித்தியானந்தம் | ஆசிரியர் | SLTS I |
| திருமதி. சு. கண்ணன் | ஆசிரியர் | SLTS 2- II |
| திருமதி. கோ. ஸ்ரீஸ்கந்தன் | ஆசிரியர் | SLTS 3 - IC |
| திருமதி. சு. கிரிதரன் | ஆசிரியர் | SLTS 2-II |
| திருமதி. சு. ரவிச்சந்திரன் | ஆசிரியர் | SLTS 2- II |

# பாடசாலையிலுள்ள குழுக்கள்

1. பாடசாலை அபிவிருத்திக் குழு

   திரு. ம. மகாகேதீஸ்வரன்
   திருமதி. வா. நித்தியானந்தன்
   திருமதி. மா. யோகேந்திரன் (பொருளாளர்)
   திரு. ஐ. நிமலராஜன் (செயலாளர்)
   திருமதி. சு. கண்ணன்
   திருமதி. கு. புளோரிடா (பெற்றார்)
   திருமதி. அ. வளர்மதி (பெற்றார்)
   திரு. க. விக்னராஜா (பெற்றார்)
   திரு. செ. செல்வரத்தினம் (ப. மாணவர் ச. பிரதிநிதி)
   திரு. செ. குணராசா (ப. மாணவர் ச. பிரதிநிதி)
   திரு. ஜெ. சாள்ஸ் லசாரஸ் (வலயப் பிரதிநிதி)

2. தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு

   திருமதி. சு. கண்ணன்
   திருமதி. கோ. ஸ்ரீஸ்கந்தன்
   திருமதி. அ. அன்ரன் இராசநாயகம்

3. பாடசாலை முகாமைத்துவக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன்
திருமதி. வா. நித்தியானந்தன்
திருமதி. அ. அன்ரன் இராசநாயகம்
திருமதி. சு. கிரிதரன்
திருமதி. சு. ரவிச்சந்திரன்
திருமதி. கோ. ஸ்ரீஸ்கந்தன்
திருமதி. சு. கண்ணன்
திருமதி. மா. யோகேந்திரன்

4. கட்டாயக்கல்விக் குழு

திருமதி. சு. கண்ணன்
திருமதி. வா. நித்தியானந்தன்
திருமதி. மா. யோகேந்திரன்

5. பாடசாலைப் பெறுகைக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன் (அதிபர்)
திருமதி. மா. யோகேந்திரன்
திருமதி. வா. நித்தியானந்தன்

6. உணவு மேற்பார்வைக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன் (அதிபர்)
திருமதி. மா. யோகேந்திரன்
திருமதி. சு. கண்ணன்
திருமதி. வ. அருட்செல்வன் (பெற்றார்)
திருமதி. பு. குலரத்தினம் (பெற்றார்)

7. பாடசாலை சுகாதாரக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன் (அதிபர்)
திருமதி. அ. அன்ரன் இராசநாயகம்
திருமதி. சு. கிரிதரன்

8. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன் (அதிபர்)
திருமதி. வா. நித்தியானந்தன்
திருமதி. அ. அன்ரன் இராசநாயகம்
திருமதி. சு. கிரிதரன்
திருமதி. சு. ரவிச்சந்திரன்
திருமதி. கோ. ஸ்ரீஸ்கந்தன்
திருமதி. சு. கண்ணன்
திருமதி. மா. யோகேந்திரன்

9. பாடசாலை வரவுக் குழு

திரு. ம. மகாகேதீஸ்வரன் (அதிபர்)
திருமதி. மா. யோகேந்திரன்
திரு. சு. கண்ணன்
திருமதி. அ. அன்ரன் இராசநாயகம்
திரு. எஸ். குகதாசன் (கிராம அலுவலர்)
திரு. பு. குலரத்தினம் (பெற்றார்)

# மாணவர் மதிப்பளிப்பு - 2017

## தரம் 1

**செல்வன் நிமலராஜன் டார்மீகன்**

சராசரிப் புள்ளி
சித்திரம் வரைதல் 2ம் இடம்
பண்ணிசை 2ம் இடம்

**செல்வன் தியாகு ஐதுசன்**

வரவொழுங்கு
மாலை கோர்த்தல் 2ம் இடம்

**செல்வன் நந்தகுமார் பகிஷன்**

பண்ணிசை 3ம் இடம்

**செல்வன் உதயகுமார் உஷாந்த்**

மாலை கோர்த்தல் 3ம் இடம்

**செல்வன் பாஸ்கரன் கனிஷ்ரன்**

சராசரிப் புள்ளி

**செல்வன் கிருபாகரன் கம்சிகன்**

சராசரிப் புள்ளி

**செல்வி அட்சிகா விவேகானந்தன்**

சராசரிப்புள்ளி
மாலை கோர்த்தல் 1ம் இடம்
கோலம் போடுதல் 2ம் இடம்
பண்ணிசை 1ம் இடம்
சித்திரம் வரைதல் 1ம் இடம்

**செல்வி மகிஷா சந்திரகுமார்**

மாலை கோர்த்தல் 3ம் இடம்

பண்ணிசை 3ம் இடம்

கோலம் போடுதல் 3ம் இடம்

**செல்வி சயானா கலையரசன்**

கோலம் போடுதல் 1ம் இடம்

**செல்வி அபிசாமினி சத்தியேந்திரா**

கோலம் போடுதல் 3ம் இடம்

**செல்வி தனுசன் ஜெனிபர்**

சித்திரம் வரைதல் 3ம் இடம்

**செல்வி தாருகா ஜெயராசா**

சராசரிப்புள்ளி

**ஊக்குவிப்பு பரிசு பெறுவோர்**

செல்வன் கஜேந்திரன் அன்புராஜ்

செல்வன் விக்னேஸ்வரன் பிரபாஸ்

செல்வன் விக்னேஸ்வரன் டோனுசான்

செல்வன் யோகராசா சபிக்ஷன்

செல்வன் ச லபிசன்

செல்வன் டெ.ரதீஷன்

செல்வி செ வினுஷ்கா

## தரம் 2

**செல்வன் அகிலன் அயன்**

சராசரிப் புள்ளி

**செல்வன் அருட்செல்வன் கஜானன்**

பூமாலை கோர்த்தல் 2ம் இடம்

**செல்வன் கணேசராசா கோகுலன்**

சராசரிப் புள்ளி

**செல்வன் பாலகிருஸ்ணன் கஜானன்**

வரவொழுங்கு

கோலம் போடுதல் 3ம் இடம்

**செல்வன் கிருஷ்ணமூர்த்தி காரணிகன்**

கோலம் போடுதல் 2ம் இடம்

சித்திரம் வரைதல் 3ம் இடம்

**செல்வன் நந்தகுமார் அபிஷன்**

சித்திரம் வரைதல் 2ம் இடம்

**செல்வி ஹரிணி விக்னராஜா**

சராசரிப் புள்ளி

மாலை கோர்த்தல் 3ம் இடம்

பண்ணிசை 1ம் இடம்

**செல்வி ஜெனோமி ஜெகன்**

கோலம் போடுதல் 1ம் இடம்

மாலை கோர்த்தல் 3ம் இடம்

**செல்வி சாருண்யா வேல்முருகன்**

மாலை கோர்த்தல் 1ம் இடம்

சித்திரம் வரைதல் 1ம் இடம்

கோலம் போடுதல் 3ம் இடம்

**செல்வி அபிஷா வசந்தன்**

சராசரிப்புள்ளி

பண்ணிசை 3ம் இடம்

செல்வி ஹருஷி காண்டீபராசா
பண்ணிசை 3ம் இடம்

## தரம் 03

செல்வன் நிமலராஜன் நிதுசன்
சராசரிப் புள்ளி
சித்திரம் வலய மட்டம் 2ம் இடம்
கோலம் போடுதல் 1ம் இடம்

செல்வி நிவேதனா குகதாஸ்
சராசரிப் புள்ளி
தேவாரம் இசைத்தல் 2ம் இடம்
கோலம் போடுதல் 3ம் இடம்

செல்வி விதுசா செல்வராசா
சராசரிப் புள்ளி
மாலை கட்டல் 2ம் இடம்
கோலம் போடுதல் 2ம் இடம்
சித்திரம் வரைதல் 3ம் இடம்

செல்வன் யோகன் யோகேஸ்வரன்
வரவொழுங்கு
சித்திரம் வரைதல் 2ம் இடம்

செல்வன் அபிரேக்கா கலையரசன்
தேவாரம் இசைத்தல் 1ம் இடம்

செல்வன் திவிஷ்ணா கதிர்காமநாதன்
சராசரிப்புள்ளி

செல்வி கிஸ்ஷாந்தி சிறீஸ்குமார்
தேவாரம் இசைத்தல் 3ம் இடம்

**செல்வன் தனுசன் தனுசியன்**

மாலை கட்டுதல் 1ம் இடம்

**செல்வன் வல்சராஜ் லபிசன்**

மாலை கட்டுதல் 3ம் இடம்

**செல்வி ஸ்ரீபன்திலக் திலக்சியா**

வரவொழுங்கு

**செல்வன் சுதாகரன் றொகாந்தன்**

மாலை கட்டுதல் 3ம் இடம்

## தரம் 04

**செல்வன் விக்னேராஜா ரனோஜன்**

சராசரிப் புள்ளி

கோலம் போடுதல் 1ம் இடம்

சித்திரம் வரைதல் 3ம் இடம

தேவாரம் எழுதுதல் 1ம் இடம்

மாலை கட்டுதல் 3ம் இடம்

**செல்வி குலரத்தினம் சுஜித்திரா**

சராசரிப்புள்ளி

மாலை கட்டு தல் 2ம் இடம்

இசையும் அசையும் வலய மட்டம் 2ம் இடம்

சித்திரம் வரைதல் கோட்டமட்டம் 2ம் இடம்

**செல்வி முகுந்தன் சங்கவி**

சராசரிப்புள்ளி

கோட்ட மட்டதமிழ் மொழித்தினம் 3ம் இடம்

கோலம்போடுதல் 2ம் இடம்

தேவாரம் எழுதுதல் 3ம் இடம்

**செல்வி சக்தீஸ்வரன் சுருதிகா**

சராசரிப்புள்ளி
கோலம் போடுதல் 3ம் இடம்
வினாவிடைப் போட்டி 1ம் இடம்

**செல்வன் செல்வகுமார் விஜுஸ்ரன்**

சித்திரம் வரைதல் 3ம் இடம்
கோலம் போடுதல் 2ம் இடம்

**செல்வன் ரஜனிகாந்தன் நிருஜன்**

மாலை கட்டுதல் 1ம் இடம்
கோலம் போடுதல் 3ம் இடம்

**செல்வி சபிதா வசந்தன்**

வரவொழுங்கு
தேவாரம் இசைத்தல் 3ம் இடம்

**செல்வி ஜனனிகா நவநீதராசா**

சராசரிப்புள்ளி

**செல்வி நிலோஜினி ஜெயகாந்தன்**

சராசரிப்புள்ளி

**தரம் 05**

**செல்வன் அருட்செல்வன் அருண்ராஜ்**

சராசரிப்புள்ளி
மாலை கட்டுதல் 1ம் இடம்
சித்திரம் வரைதல் 1ம் இடம்
கோலம்போடுதல் 3ம் இடம்
தேவாரம் எழுதுதல் 2ம் இடம்

**செல்வி பிரம்மியா பிரசன்னா**

சராசரிப்புள்ளி

வரவொழுங்கு

மாலை கட்டுதல் 3ம் இடம்

கோலம்போடுதல் 3ம் இடம்

**செல்வி ஆர்த்திகா சண்முகலிங்கம்**

சராசரிப்புள்ளி

தேவாரம் எழுதுதல் 3ம் இடம்

தேவாரம் ஓதுதல் 1ம் இடம்

**செல்வி சபானா சசிகுமார்**

சராசரிப்புள்ளி

சித்திரம் வரைதல் 2ம் இடம்

தேவாரம் எழுதுதல் 1ம் இடம்

தேவாரம் ஓதுதல் 2ம் இடம்

**செல்வன் மகாதேவன் வாஹஜன்**

சித்திரம் வரைதல் 3ம் இடம்

**செல்வன் பாலச்சந்திரன் வாஹஜன்**

மாலை கட்டுதல் 2ம் இடம்

**செல்வன் ஜெகன் ஜெயந்த்**

கோலம் போடுதல் 2ம் இடம்

**பாடசாலை பல்துறை வீர விருது**

செல்வி பிரம்மியா பிரசன்னா

## தரம் 5 தேசிய புலமைப் பரிசிற் பரீட்சை - 2017
## வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்

செல்வி பிரம்மியா பிரசன்னா 165 புள்ளி

செல்வன் அருட்செல்வன் அருணராஜ் 158 புள்ளி

செல்வி ஆர்த்திகா சண்முகலிங்கம் 157 புள்ளி

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்

செல்வி ஷதுர்ஜா சந்திரகுமார் 148 புள்ளி

செல்வி சபானா சசிகுமார் 133 புள்ளி

செல்வன் பாலச்சந்திரன் வானுஜன 125 புள்ளி

செல்வன் மகாதேவன் வானுஜன் 122 புள்ளி

### 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்

செல்வன் மதியழகன் கலக்ஷன் 94 புள்ளி

செல்வன் ஜெகன் ஜெயந்த் 91 புள்ளி

செல்வன் ஜெயக்குமார் ஜெதுர்ஷன் 83 புள்ளி

செல்வன் கமலேஸ்வரன் விஜசாந்த் 79 புள்ளி

செல்வன் ரவீந்திரன் யுதர்ஷன் 78 புள்ளி

செல்வன் பிரசீலன் பிருத்திகன் 71 புள்ளி

## ELRTC வெற்றியாளர்கள்

2016
Level I spoken & written
வி. ஹரிணி
ஜெ. ஜெனோமி

### Level 1 SPOKEN

வி. அட்சிகா - Distinction
ச. மகிஷா - Merit
க. சயானா - Merit
டெ. ரதீசன் - Merit

### Level 2 SPOKEN

வி. சயந்தனா - Merit
வி. சயந்திகா - Merit

## பரிசளிப்பு விழா அனுசரணையாளர்கள்

| | |
|---|---|
| கொமெர்ஷல் வங்கி - | 5000.00 |
| இலங்கை வங்கி - | 5000.00 |
| சிற்றுண்டி | திருமதி அ.வளர்மதி |
| | திருமதி. ச. ஜெயந்தி |
| | திருமதி. பி. மேர்சி லூட் |

மேடைத் திரைச்சீலை - பழைய மாணவி செல்வி. சு. சுகப்பிரியா

DVD Player , Box — பழைய மாணவி செல்வி. ஜெ.திகழினி

பழைய மாணவன் செல்வன் ஜ.அபிநயன்

# பாடசாலைக் கீதம்

வாழியவே என்றும் வாழியவே
வளர்ந்திடும் புகழுடன் வாழியவே
கரவை விக்னேஸ்வர ஆரம்பப் பள்ளி
கலங்கரை விளக்கென வாழியவே

(வாழியவே)

கரவையின் விளக்கென எழுந்திடும் கூடம்
கல்வியை புகட்டும் கருணை இல்லம்
உலகினில் உயர்ந்த உத்தமர் பலரும்
உதித்திட உழைத்திடும் எங்கள் இல்லம்

(வாழியவே)

தேர்ச்சிகள் பெற்று தேர்வினில் வென்று
தேடலில் உயர்ந்திட வழி காட்டும்
மாற்றங்கள் ஒன்றே நிரந்தரம் என்ற
மகிமையை உலகினில் நிலை நாட்டும்

(வாழியவே)